**S.C.No. 19/2022**
**அ.சா.20 – கோபாலகிருஷ்ணன்**
**நாள். 02.02.2026**

(ஆஜர் 1ம் எதிரி ஆஜராகியுள்ளார். 1ஆம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.) (**2 ஆம் எதிரி இறந்துவிட்டார்.)**

(3 ஆம் எதிரி ஆஜரில்லை.) (4 மற்றும் 5 எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது).

**Crl.M.P.No.1881/2025–ல் கடந்த 21.11.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் அ.சா.20 கோபாலகிருஷ்ணன் திரும்ப வரவழைக்கப்பட்டு 1, 3 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ல் உள்ள புகைப்படங்களை அறிவியல் ஆய்விற்கு உட்படுத்தினால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்று தெரியவரும் என்பதால் ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் புகைப்படங்களை Super impose க்காக அனுப்பியுள்ளேன். Super Imposeக்கு நான் இறந்தவரின் புகைப்படத்தை அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் யாரும் உங்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த சான்றாவணங்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து வழக்காவணங்கள் அனைத்தும் ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.02 18:07:51 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.